தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக

நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகள்!

18-12-2025

புதுடெல்லி, டிச. 19 -

நாடாளுமன்ற குளிர் கால கூட்டத் தொடர் 1.12.2025 அன்று தொடங்கியது. இத்தொடரில் மக்களவை, மாநிலங்களவை இரு அவைகளிலும் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டின் நலனுக்காக முன்னேற்றத்திற்காக நேற்று (18.12.2025) எழுப்பிய கேள்விகள் வருமாறு:

1. விளையாட்டு உட்கட்டமைப்பை மேம்படுத்த ஒதுக்கப்பட்ட நிதியில் 21% பயனபடுத்தாமல் இருப்பது ஏன்?

திருச்சி சிவா

விளையாட்டுத் துறையில் உட்கட்டமைப்பை மேம்படுத்த ஒதுக்கப்பட்ட நிதியில் 21% பயன்படுத்தாமல் இருப்பது ஏன் என திமுக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி கேள்வி எழுப்பியுள்ளார்.

தீனதயாள் உபாத்யாய் திட்டத்தின்கீழ் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை பாலின வாரியாக வெளியிட வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

2. நாட்டின் அனைத்து கிராமங்களுக்கும் இணைய அலைவரிசையை ஒன்றிய அரசு உறுதி செய்யுமா?

கள்ளக்குறிச்சி மலையரசன்

நாட்டின் அனைத்து கிராம மக்களுக்கும் போதுமான இணைய அலைவரிசை, மின்சாரம் மற்றும் டிஜிட்டல் சாதனங்களுக்கான வசதிகளை உறுதி செய்ய அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என திமுக மக்களவை உறுப்பினர் மலையரசன் கேள்வி எழுப்பியுள்ளார். பெண்கள், மாணவர்கள் மற்றும் விளிம்புநிலை மக்கள்களுக்கு டிஜிட்டல் சேவைகள் முழுமையாகவும் சமமாகவும் கிடைப்பதை உறுதி செய்வதற்காக சிறப்பு முயற்சிகள் ஏதேனும் எடுக்கப்பட்டுள்ளதா? என்றும் இணைய தொடர்புகள் வழங்கும் திட்டங்களில் எதிர்கொள்ளும் உள்கட்டமைப்பு குறைபாடுகளைக் களைய முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் யாவை? என்றும் அவர் கேட்டுள்ளார்.

3. பராமரிப்பில்லாத தேசிய நெடுஞ்சாலைகள் - சுங்கச் சாவடிகள் கட்டணத்தை முறையாக பயன்படுத்தாத ஒன்றிய அரசு!

தருமபுரி அ.மணி

தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள சுங்கச் சாவடிகளின் எண்ணிக்கை மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்து திமுக மக்களவை உறுப்பினர் அ. மணி கேள்வி எழுப்பியுள்ளார். சுங்கச் சாவடிகளில் கூட்ட நெரிசலை குறைக்க பல்வேறு கோரிக்கைகள் வந்துள்ள நிலையில் ஒன்றிய அரசு அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்றும் கடந்த மூன்றாண்டுகளில் தருமபுரி சுங்கச் சாவடிகளில் வசூலிக்கப்பட்ட தொகை தேசிய நெடுஞ்சாலைகளின் பராமரிப்புக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்றும் அதன் விவரங்கள் கேட்டும் அவர் கேள்வி எழுப்பினார்.

4. தனியார்துறையை ஊக்குவிக்க பிஎஸ்என்எல் நிறுவனத்தை நஷ்டத்தில் தள்ளுகிறதா ஒன்றிய அரசு?

ஆர். கிரிராஜன்

நாட்டில் உள்ள மொத்த தொலைத்தொடர்பு கோபுரங்களில் 50 சதவீதத்திற்கும் அதிகமானவை பிஎஸ்என்எல் நிறுவனத்திடம் உள்ளன, இருந்தபோதிலும் பிஎஸ்என்எல் இணைப்புகள் மற்ற தனியார் நிறுவனங்களைவிடவும் குறைவாக இருப்பது குறித்து திமுக மாநிலங்களவை உறுப்பினர் ஆர். கிரிராஜன் கேள்வி எழுப்பினார். பிஎஸ்என்எல் நிறுவனம் தனது மொபைல் சந்தாதாரர் தளத்தையும் வைஃபை இணைப்புகளையும் அதிகரிக்க நடவடிக்கைகள் எடுத்துள்ளதா என்றும் அவர் கேட்டுள்ளார்.

5. பெருநகரங்களை நரகமாக்கும் காற்று மாசு - அலட்சியமாக கையாளும் ஒன்றிய அரசு!

ராஜாத்தி சல்மா கண்டனம்

2019-ல் தொடங்கப்பட்ட தேசிய தூய்மைக் காற்றுத் திட்டத்தின் (NCAP) செயல்பாடுகளை அளவிட நடத்தப்பட்ட ஆய்வுகள் குறித்து திமுக எம்.பி. ராஜாத்தி சல்மா கேள்வி எழுப்பினார். இலக்கு எட்டப்படாத 131 நகரங்களில் PM10 அளவை குறைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? டெல்லி உட்பட முக்கிய பெருநகரப் பகுதிகளில் அதிக காற்று மாசுவிற்கான காரணங்கள் யாவை மற்றும் NCAP திட்டத்தின்கீழ் மாநிலங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு வழிமுறைகளை வலுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை? என்றும் அவர் கேட்டுள்ளார்.

6. குவாண்டம் தொடர்பு வலையமைப்புகளை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

எஸ்.ஆர். சிவலிங்கம்

இந்திய இராணுவத்துடன் இணைந்து பணியாற்றுதல் மற்றும் தற்போதுள்ள ஆப்டிக் பைபர் உள்கட்டமைப்பைப் பயன்படுத்துதல் உட்பட நீண்ட தூர குவாண்டம் தொடர்பு வலையமைப்புகளின் மேம்பாடு மற்றும் செயல்பாட்டுகளை ஊக்குவிக்க அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என திமுக எம்.பி. எஸ்.ஆர். சிவலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார். தேசிய குவாண்டம் இயக்கத்தின் முன்னேற்றங்களைப் பயன்படுத்தி, நாடு முழுவதும் உள்ள குவாண்டம் திறவு விசை விநியோக உள்கட்டமைப்பை விரிவுபடுத்துவதற்காக அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் என்ன? தேசிய குவாண்டம் இயக்கத்தை ஊக்குவிக்க அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், நிதி ஒதுக்கீடுகள் குறித்த விவரங்கள் மற்றும் இந்த குவாண்டம்தொடர்புமுன்னேற்றங்களால் தேசிய டிஜிட்டல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப இறையாண்மையின் மீதான எதிர்பார்க்கப்படும் தாக்கம் என்ன? எனும் கேள்விகளையும் அவர் கேட்டுள்ளார்.

7. கேலோ பாரத் கொள்கை 2025- தமிழ்நாட்டில் செயல்படுத்துவது எப்போது?

எஸ். கல்யாணசுந்தரம்

புதிதாக அங்கீகரிக்கப்பட்ட கேலோ பாரத் கொள்கை 2025, மாநிலங்கள் முழுவதும் திறமையாளர்களைக் கண்டறிதல் மற்றும் பயிற்சி அளித்தல் உட்பட விளையாட்டு மேம்பாட்டை எவ்வாறு வலுப்படுத்தும் என்று திமுக மாநிலங்களவை உறுப்பினர் எஸ். கல்யாணசுந்தரம் கேள்வி எழுப்பினார். இத்திட்டத்தில் குறிப்பிட்டுள்ள உள்கட்டமைப்பு உருவாக்கம் மற்றும் விளையாட்டு அறிவியலை ஊக்குவிக்கும் செயல்பாடுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய பயன்படுத்தப்பட்ட அளவுகோல்கள் என்ன? இக்கொள்கையின் செயலாக்க வரைபடத்தின் கீழ், சிறப்பு மையங்கள், கிராமப்புற விளையாட்டு மையங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகளை தமிழிநாட்டில் உருவாக்குவது எப்போது? இளைஞர்கள் மற்றும் உயர் செயல்திறன் கொண்ட விளையாட்டு வீரர்களுக்குச் சிறந்த நிதி ஒதுக்கீடு, கண்காணிப்பு மற்றும் விளைவுகளை உறுதி செய்வதற்காக, கேலோ இந்தியா திட்டங்களை கேலோ பாரத் கொள்கை 2025 உடன் ஒருங்கிணைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை? என்று அவர் கேட்டுள்ளார்.

8. கிராமங்களில் குடிநீர் பற்றாக்குறையை தீர்க்குமா ஒன்றிய அரசின் திட்டம்?

காஞ்சிபுரம் ஜி. செல்வம்

தமிழ்நாட்டில் ஜல் ஜீவன் இயக்கம் (ஜேஜேஎம்) - ஹர் கர் ஜல் திட்டத்தின் கீழ் வீட்டுக்குழாய் இணைப்புகள் வழங்கப்பட்ட மொத்த கிராமப்புறக் குடும்பங்களின் எண்ணிக்கை விவரங்கள் கேட்டு திமுக மக்களவை உறுப்பினர் ஜி. செல்வம் கேள்வி எழுப்பினார். இந்தத் திட்டத்தின்கீழ் நிலுவையில் உள்ள பணிகள் என்ன மற்றும் அவற்றை நிறைவு செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடு என்ன? தமிழ்நாட்டில் 'ஹர் கர் ஜல்' எனச் சான்றளிக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை எவ்வளவு? மேலும் உள்ளூர் நீர் அமைப்புகளை நிலையான முறையில் நிர்வகிக்கவும் பராமரிக்கவும் கிராம பஞ்சாயத்துகளுக்கு அதிகாரம் அளிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் நீர் விநியோகத்தின் தரம் மற்றும் நிலைத்தன்மையை உறுதிசெய்ய அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

வாழ்வார் என்றும் பேராசிரியர்!



எவரும் நமக்குத் தாழ்ந்தவர் இல்லை!
எவர்க்கும் நாமும் தாழ்ந்தவர் இல்லை!
சுவரில் எழுதிய சித்திரம் போலே
சொன்னவர் இப்படிப் பேரா சிரியர்!

பெரியார், அண்ணா இன்றைக் கில்லை!
பெரிய வெற்றிடம் நமக்கின் றில்லை!
இருவரின் வடிவாய் கலைஞர் இருக்கிறார்!
என்று மொழிந்தவர் பேரா சிரியர்!

சூடும் சொரணையும் சொற்களில் தந்தவர்!
சுயமரி யாதை உடுத்தி நடந்தவர்!
ஏடும் நாடும் போற்ற வாழ்ந்தவர்!
இனமானக் காவலர் பேரா சிரியர்!

வலைப்ப டாதவர் வஞ்சகம் சூழ்ச்சியில்!
மயங்கி விடாதவர் வெற்றுப் புகழ்ச்சியில்!
குலப் பகைவரும் குறைசொல்ல முடியாக்
கொள்கைச் சூரியன் பேரா சிரியர்!

வான்மழை போலே கருணை பொழிந்தவர்!
வார்த்தையும் வாழ்க்கையும் ஒன்றென நின்றவர்!
தேன்மக ரந்தப் பூந்தமிழ்! எங்கள்
திராவிடத் தென்றல் பேரா சிரியர்!

ஏற்ற பொறுப்புக்குப் பெருமை சேர்த்தவர்!
எளிய தொண்டரை அரவ ணைத்தவர்!
சீற்றப் புயலாய் இனப்பகை முன்னே
சினந்து கனன்றவர் பேரா சிரியர்!

வண்கடல் அலையாய் ஆர்ப்ப ரித்தவர்!
வடக்கின் இடக்கை நேர்எ திர்த்தவர்!
கிண்கி ணீர்எனும் வெண்கலக் குரலால்
கீர்த்தி படைத்தவர் பேரா சிரியர்!

எங்கும் தமிழே! எதிலும் தமிழே!
இன்னுயிர் ஆகும் அன்னை நிலமே!
சிங்க மறவனே! சிலிர்த்தெழு வாய்!எனத்
தீக்கனல் பெய்தவர் பேரா சிரியர்!

எதுநம் பண்டைய தமிழ்மர பென்றும்
எதுநம் தொல்புகழ் வரலா றென்றும்
"புதுவாழ்வு" என்னும் இதழை நடத்திப்
பொன்னொளி தந்தவர் பேரா சிரியர்!

எத்தனைச் சோதனை இடர்தொடர் கணையாய்!
இடம்பிற ழாமல் தடம்புர ளாமல்
அத்தனைக் களத்திலும் தலைமைக்குத் துணையாய்
அருகில் இருந்தவர் பேரா சிரியர்!

ஆட்சியில் கழகம் வாகை சூடவும்
ஆதிக்க இந்தி அஞ்சி ஓடவும்
மூச்சும் பேச்சும் நிற்கும் வரைக்கும்
முழக்கம் செய்தவர் பேரா சிரியர்!

கலைஞரை என்னைப் பிரிக்க நினைப்பவன்
கலப்படம் இல்லாத முட்டாள்! என்றே
தலைமைச் செயற்குழு மண்டபம் அதிரச்
சாற்றிய கோமான் பேரா சிரியர்!

நதியென இயங்கும் நல்ல இளைஞன்!
நாட்டுக்கும் மொழிக்கும் கழகத் திற்கும்
"புதிய விடியல் ஸ்டாலின்" என்றே
புகழ்ந்து மகிழ்ந்தவர் பேரா சிரியர்!

வீட்டுச் சாவியைப் பிள்ளைக்கு வழங்கிட
வேறெவன் அனுமதி வேண்டும்? "ஸ்டாலின்"
ஆற்றல் தகுதியைக் கலைஞரும் நானும்
அறிவோம் என்றவர் பேரா சிரியர்!

உளமார் பொதுக்குழு ஒருமன தாக
ஒப்புதல் தந்தது! உமக்கு மட்டுமா?
" தளபதி ஸ்டாலின்" இனிமேல், எனக்கும்
தலைவர் என்றவர் பேரா சிரியர்!

இன்றுபே ராசான் இருந்திருப் பாரேல்
இளைஞர் அணியின் எழுகதி ராக
நின்றுயர் "உதய நிதி" வா ழிய!என
நெஞ்சார அணைத்து மகிழ்ந்திருப் பாரே!

தொண்டறச் செம்மல்! நமக்குள் என்றும்
துலங்கும் ஒளியாய் விளங்கி மிளிர்வார்!
வண்டமிழ் முழங்கும் எண்டிசை எங்கும்
வாழ்வார் ஐயா பேராசிரியர்!

... கவிச்சுடர் கவிதைப்பித்தன்.

ஐ.ஐ.டி. பாம்பேயில் நடைபெற்ற ஹேக்கத்தான் போட்டியில்

தமிழ்நாடு மாணவர்கள் முதலிடம் - ரூ.1லட்சம் பரிசு!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வாழ்த்து!

சென்னை, டிச.19- ஐ.ஐ.டி. பாம்பேயில் நடைபெற்ற கூகுள் அட்மாப் (Google AdMob) ஹேக்கத்தான் போட்டியில், சென்னை சிஐடி (CIT) பொறியியல் கல்லூரியின் செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவியல் (Artificial Intelligence & Data Science - AI&DS) துறையைச் சேர்ந்த இரண்டாம் ஆண்டு மாணவர்கள் தமிழ்குமரன் (Tamizhkumaran), கரீம் (Kareem), வருண் (Varun) மற்றும் சூர்யா (Surya) ஆகியோர் அடங்கிய குழு முதல் இடத்தை கைப்பற்றி ரூ.1 லட்சம் பரிசுத்தொகையை வென்றுள்ளது. இச்சாதனையை அமைச்சர் சா.மு.நாசர் பாராட்டி வாழ்த்தினார்.

இந்த தேசிய அளவிலான ஹேக்கத்தான் போட்டியில், இந்தியா முழுவதிலுமிருந்து 600 க்கும் மேற்பட்ட அணிகள் கலந்து கொண்டன. பல கட்டத் தேர்வுகளுக்குப் பிறகு, சிறந்த 10 அணிகள் மட்டும் ஐஐடி பாம்பேக்கு இறுதிச்சுற்றுக்கு தேர்வு செய்யப்பட்டன. அந்த இறுதிச்சுற்றில், சிறப்பான தொழில்நுட்பத் திறன், புதுமையான யோசனைகள் மற்றும் செயல்படக்கூடிய தீர்வுகளை முன்வைத்து, சென்னை சிஐடி கல்லூரி மாணவர்கள் முதலிடத்தைப் பெற்று பெரும் சாதனை படைத்துள்ளனர்.

இந்த வெற்றியைத் தொடர்ந்து, மாணவர்களின் சிறப்பான சாதனையைப் பாராட்டி, தமிழ்நாடு சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் நாசர் நேரில் பாராட்டுத் தெரிவித்தார். மேலும், இந்த வெற்றி தமிழக மாணவர்களின் திறமைக்கு தேசிய அளவில் கிடைத்த முக்கிய அங்கீகாரம் என அவர் குறிப்பிட்டார்.

இந்த சாதனை, இளம் மாணவர்களிடையே தொழில்நுட்பப் புதுமை மற்றும் ஆராய்ச்சி மனப்பாங்கை ஊக்குவிக்கும் ஒரு முன்மாதிரியாக விளங்குகிறது என கல்வியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

படப்பை ஆ.மனோகரன் தலைமையில்

நாட்டரசன்பட்டு ஊராட்சியில் 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' கூட்டம்!

அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

சென்னை, டிச.19-

குன்றத்தூர் தெற்கு ஒன்றியம் - நாட்டரசன்பட்டு ஊராட்சியில் 'என் வாக்குச் சாவடி... வெற்றி வாக்குச்சாவடி...' பரப்புரையை முன்னெடுக்கும் பாகம் எண்.307 பயிற்சிக் கூட்டம் நாளை (20.12.2025 சனிக்கிழமை) காலை 9.00 மணியளவில் வட மேல்பாக்கத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் - காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன் தலைமை வகிக்கிறார். பாக நிலை முகவர் சி.க.இருசப்பன் வரவேற்புரையாற்றுகிறார்.

ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினர்கள் வ. நந்தகோபால், சி.பார்த்தசாரதி, மூ. இராஜேந்திரன், எஸ்.கர்ணன், குமுதாசுமன், டி. லோகநாதன், த.ஏழுமலை, என்.வாசு, வசந்தி சாம்பசிவம், மஞ்சுளா கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன் பங்கேற்று ஆலோசனை வழங்குகிறார்.

இதில் மீஞ்சூர் கே.ஜி. பாஸ்கர் சுந்தரம், சரஸ்வதி மனோகரன் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

இந்த கூட்டத்தில் அனைத்து அணிகளின் நிர்வாகிகளும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இனமானப் பேராசிரியர் பிறந்தநாள்! சென்னை தென்மேற்கு மாவட்ட

கலை - இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் அறுசுவை உணவு!

ச.சண்முகநாதன் அறிக்கை!

சென்னை, டிச.19-

சென்னை தென்மேற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பிலும், பவள விழா கண்ட தி.மு.க. நற்பணி மன்றத்தின் சார்பிலும் இனமானப் பேராசிரியர் அவர்களின் 103-வது பிறந்த நாளை முன்னிட்டு இன்று (19.12.2025) காலை 9 மணிக்கு தியாகராயர் நகர் தண்டபாணி தெருவில் கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கி அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகின்றது.

இதில் கழக முன்னணியினர், கழகத் தோழர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை சென்னை தென்மேற்கு மாவட்ட கழக இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் ச.சண்முகநாதன் செய்துள்ளார்.

திருப்பூர் தெற்கு மாவட்டம் – குடிமங்கலம் வடக்கு

ஒன்றியச் செயலாளர் ச.கிரி மறைவு!

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

திருப்பூர், டிச. 19 -

திருப்பூர் தெற்கு மாவட்டம் குடி மங்கலம் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ச.கிரி மறைவுக்கு முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

திருப்பூர் தெற்கு மாவட்டம் குடிமங்கலம் வடக்கு ஒன்றிய கழக செயலாளராக பணியாற்றி வந்த ச.கிரி என்பவர் நீண்ட நெடிய பாரம்பரிய மான தி.மு.க. குடும்பத்தைச் சேர்ந்தவர் மற்றும் துடிப்புடன் கழகப் பணியாற்றக் கூடியவர்.

நேற்று (18.12.2025 - வியாழக்கிழமை) அதிகாலை 1.00 மணியளவில் மாரடைப்பு ஏற்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் ச.கிரி அவர்கள் இயற்கை எய்தினார் என்ற செய்தியை கேட்டு மிகவும் வருத்தமடைந்தேன்.

அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும், கழகத் தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

110வது வட்டத்தில்

"என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" கூட்டம்!

வட்டச் செயலாளர் கே.எஸ்.தினேஷ்பிரபு அறிக்கை!

சென்னை, டிச. 19-

ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 110வது வட்ட செயலாளர் கே.எஸ்.தினேஷ் பிரபு அறிக்கை வருமாறு:-

மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு மேற்கு பகுதியில் அமைந்துள்ள 110வது வட்டத்திற்கு உட்பட்ட BLA-2 மற்றும் BLC, BDA, BYO ஆகியோருக்கு பாக வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணைப்படி "என் வாக்குசாவடி வெற்றி வாக்குசாவடி" 110வது வட்டத்தில் 44, 45, 48, 49, 50 ஆகிய பாகங்களுக்கான கூட்டம் 110வது வட்டச் செயலாளர் கே.எஸ்.தினேஷ் பிரபு தலைமையில் இன்று 19.12.2025 - வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணியளவில் அப்பாசாமி தெரு, ஹாரிங்டன் ரோடு 7வது அவென்யூ, சின்மயா பள்ளி அருகில் நடைபெற உள்ளது.

இந்த கூட்டத்திற்கு சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், ஆயிரம்விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன், ஆயிரம்விளக்கு மேற்கு பகுதிக் கழக செயலாளர் வினோத் வேலாயுதம், தேர்தல் பொறுப்பாளர் சைதை சாதிக் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளார்கள்.

எனவே, 110வது வட்டத்தில் உள்ள BLA-2 மற்றும் BLC, BDA, BYO, கழக நிர்வாகிகள் மற்றும் மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு 110வது வட்ட செயலாளர் கே.எஸ். தினேஷ் பிரபு அறிக்கை விடுத்துள்ளார்.

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியம், அயப்பாக்கம் ஊராட்சி, பாகம் 24 யில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன், காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. ஆகியோர் ஆலோசனைப்படி, தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்.அருணாச்சலம் தலைமையில் "என் வாக்குச் சாவடி வெற்றி வாக்கு சாவடி கூட்டம் ஒன்றியச் செயலாளர் அயப்பாக்கம் துரை வீரமணி ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் இரா.வினோத், மாறன்குமார், தனசேகர், சுதாகர், லட்சுமி, டி.யுவராஜ், ஷர்மிளா, வேலு செண்பகவள்ளி, தேன்மொழி, ரேவதி, தேவி பிரியா, ஐசக் நேசக்குமார் மற்றும் பி.எல்.ஏ.2, பி.டி.ஏ, பி.எல்.சி. நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.